# அன்பர் பணி



ஸ்ரீராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமம்

பருத்தித்துறை

## 1.1.2007 கல்பதருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பர் பணிசெய்ய
என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்து
எய்தும் பராபரமே"

தாயுமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் குக்:
# குக்கர் அல்ல

பொதுவாக ஆசிரியர்களுக்கு இரு முக்கியமான பிரச்சனைகள் உள்ளன. அவை:

1. மாணவர்களை நன்கு பாடம் கேட்க வைப்பது எப்படி?
2. மாணவர்களின் கவனத்தை முழுமையாகப் பெறுவது எப்படி?

இந்தப் பிரச்சனைகளைச் சமாளிக்க ஒரு சில அடிப்படை அம்சங்களை ஆசிரியர்கள் பெற்றிருப்பது மிகவும் அவசியம். இதோ ஆசிரியர்கள் திடப்படுவதற்கான பரிந்துரைகள் சில :

வாலிப வயதுள்ள மாணவனிடம் கவனிக்கப்பட வேண்டிய இரு மன நிலைகள் உண்டு.

ஒன்று, அவன் உணர்வுடன் செயல்படும்நிலை - Conscious mind. மற்றது. தன்னிலை மறந்து செயல்படும்நிலை - Unconscious mind. சாதாரணமாக மாணவன் கூட்டத்தில் ஒருவனாகக் கோஷம் அல்லது கூச்சல்போடும் மனநிலைதான் Mobmentality - அவனை உணர்வின்றிச்செயல்பட வைக்கிறது. கூட்டத்தில் மாணவன் இருக்கும் போது ஆசிரியருக்கு அஞ்சாதவனாக, தன்னை ஒரு பெரிய ஹிரோவாகக் காட்டிக்கொள்வான். அப்போது அவனிடத்தில் முரட்டுத்தனம், அலட்சியம், வீண் பந்தாக்களுக்குக் குறைவு இருக்காது. இது இயற்கை.

அந்தத் தருணங்களில் மாணவன் சமநிலையை இழக்கிறான். இத்தகைய தருணங்களைச் சமாளிப்பது ஆசிரியர்களுக்கு ஒரு பெரிய சவால் அதோடு, இளமைப் பருவம் அனைத்தையும் கிண்டல் செய்யும் பருவம். அவனது கேலி செய்யும், எள்ளி நகையாடும் மனநிலையை ஆசிரியர்கள் நேரடியாகச் சரிசெய்ய முயன்றால் நிலைமை தாறுமாறாகலாம். மிரட்டி அடக்கமுயன்றாலோ, மாணவர்களின் அந்த மனநிலை வேறு எங்காவது எகிறவும் வாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவனிடமும் அளவற்ற ஆற்றல் பொதிந்துள்ளது. அதை உணர்ந்தவர்கள் உன்னதமானவர்கள் ஆகிறார்கள்; மாணவனின் கட்டுக்கடங்காத அந்த ஆற்றல்தான் கேலியாகவும் விளையாட்டுத்தனமாகவும் வெளிப்படுகிறது என்பதை ஆசிரியர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

பின் ஆசிரியர் மாணவர்களின் மனங்களில், இவ்வளவு ஆற்றல் உள்ள நீங்கள், உங்கள் ஆற்றலை நல்ல விதத்தில் ஏன் பயன்படுத்தக் கூடாது, என்ற கேள்வியை விதைக்க வேண்டும். அந்தக் கேள்வி அவர்களை முன்னேற்றும்; வரம்பற்ற ஆற்றலுடன் அவர்கள் நல்லவற்றுக்குக் கட்டுப்படுவார்கள். அறிவாலும் அன்பாலும் அதை அவர்களிடம் உணர்த்த முடியும்.

## மாணவனை அறிவால் கவர வேண்டும்

இரண்டு விதமான வியாபார முறைகள் உள்ளன. ஒன்று, பொருள்களை வாங்க வருபவர்களிடம் அவற்றை தள்ளி விடுவது; அடுத்தது வாங்க வருபவர்களைக் கவர்ந்து பொருள்களை அவர்களாகவே வாங்க வைப்பது. சாதாரண பொருள்களை விற்பவர்கள், கூவிக்கூவி அழைத்து தங்களது பொருள்களை வாங்க வருபவர்களிடம் திணிப்பார்கள். அல்லது அதிகத் தள்ளுபடி தந்து வியாபாரத்தைப் பெருக்குவார்கள்.

இது Push marketing.

இதற்கு மாறாக, பெரிய நகைக் கடை, துணிக்கடை, டிபார்ட்மெண்டல் ஸ்டோர் போன்றவற்றில் விற்பனைப் பொருள்களைக் கவர்ச்சிகரமாகக் காட்டுவார்கள். இது தானாகவே மக்களை ஈர்க்கிறது.

இது Pull marketing.

இப்படி வியாபாரத்தில் இருப்பது போல ஆசிரியர் தொழிலிலும் இரண்டு வித ஆசிரியர்கள் உள்ளனர். நல்ல மொழியாற்றல், பாடத்தில் தெளிந்த அறிவு வரைபடங்கள், சுவைமிகு சம்பவங்கள், மனதில் நிற்கும் சிறுகதைகள் போன்றவற்றால் மாணவர்களின் அறிவைத் தொடமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித் தொட முடியாதவர்களின் வகுப்பு முடிவதற்கு மாணவன் வெறுப்புடன் பொறுமை காக்கிறான். ஆசிரியரும் கஷ்டப்பட்டு பாடத்தை நடத்துகிறார். சமீபத்தில் ஜப்பான் சென்று திரும்பிய ஒருவர், அங்குள்ள தன் பேரனது படிப்பு பற்றிக் கூறினார். அந்தச் சிறுவன் பள்ளிக்குச் சென்று வருகிறான். ஆனால் வீட்டில் புத்தகத்தைத் தொடுவதில்லை.

அதனால் பொறுப்பான பெற்றோர் ஆசிரியரிடம் சென்று கேட்ட போது அந்த ஆசிரியர், "உங்கள் பேரனை ஏன் படிபடி என்று கண்டிக்கிறீர்கள்? வகுப்பில் மற்ற மாணவர்கள் நன்கு படிக்க ஆரம்பித்து ஆசிரியரிடம் பாராட்டைப் பெறும்போது இந்தச் சிறுவன் அதைப் பார்த்து ஏங்க ஆரம்பிப்பான். அப்போது அவனாகவே படிப்பை நாடி வருவான் அந்த நேரத்திற்காகத்தான் நாங்கள் காத்திருக்கிறோம்" என்றாராம்.

பாடத்தைத் திணிப்பதைவிடப் போதிப்பது நல்லது; போதிப்பதில் 'போர்' அடிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. அதைவிட மாணவனுக்குப் பாடத்தின் அவசியத்தையும், அவன் நன்கு படித்தால் என்னென்ன பலன்கள் உள்ளன என்பதையும் புரியவைத்தால் மாணவனும் படிப்பதில் ஈடுபடுவான். ஒரு கதை கேளுங்கள்:

ஒருவர் ஒரு நாயை வளர்த்து வந்தார். அதைப் பலம் பெறச்செய்ய வேண்டி அதற்கு மீன் எண்ணெய் தர ஆரம்பித்தார். நாய் சாப்பிட மறுத்தது. அவரும் விடாமல் நாயின் வாயை அகலத்திறந்து வாயில் மீன் எண்ணெயை விட்டார். நாய் அதை வேண்டாவெறுப்புடன் விழுங்கிவிட்டு ஓடிவிட்டது. தினமும் இப்படிப் பலவந்தமாக அவர் நாய்க்கு எண்ணெயை வழங்கி வந்தார்.

ஒவ்வொரு நாளும் எண்ணெய் தரும் நேரத்தில் நாய் இவர் கண்ணில் படமால் ஓடி ஒளிந்து கொள்ளும். ஒரு நாள் இவருக்கு அலுவலகம் செல்ல வேண்டிய பரபரப்பு. அதோடு நாய்க்கு எண்ணெய் புகட்ட வேண்டிய கவலை வேறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பரபரப்பில் எண்ணெய் பாட்டில் கீழே விழுந்து உடைந்துவிட்டது. இவர் திகைத்தார். முடிவில் அலுவலகம் செல்லத் தீர்மானித்துத் தமது கார் வரை சென்றார். அப்போதுதான் தான் காலணி அணியவில்லை என்பதைக் கவனித்தார்.

உடனே வீட்டிற்குள் நுழைந்தவர் அங்கு கண்டதைப் பார்த்துத் திகைத்தார். ஆம், கீழே சிந்தியிருந்த மீன் எண்ணெயை நாய் நக்கிக் கொண்டிருந்தது.

மீன் எண்ணெய் நாயை எவ்வாறு ஈர்த்ததோ, அப்படி மாணவனும் ஆசிரியர் நடத்தும் பாடத்தால் ஈர்க்கப்பட வேண்டும். இது ஆசிரியர் செய்ய வேண்டிய PUll Teaching

## மாணவனை அன்பால் கவர வேண்டும்

ஆசிரியர் நீடித்த வெற்றி பெறவும், மாணவன் பிற்காலத்திலும் இவர் என் ஆசிரியர் என்று நினைவு கூரத்தக்கப் பெருமையை அடையவும், அவனது மனதைத் தொடுவது மிக அவசியம்.

பெரும்பாலான ஆசிரியர்கள் வீட்டிலிருந்து கிளம்பும் போதே வீட்டுப்பிரச்சனைகள் பலவும் தரும் மன அழுத்தங்களுடன் பள்ளிக்குச் செல்கிறார்கள். போதாத சம்பளம். நிர்வாகம் அவர்களை நடத்தும் விதம், பிற ஆசிரியர்கள் அவர்களுக்குத்தரும் மரியாதை போன்றவையும் ஆசிரியர்களின் மன அழுத்தத்திற்கு முக்கிய காரணங்களாகின்றன. அதோடு மாணவர்களை நல்ல மதிப்பெண் பெறச் செய்ய வேண்டிய கட்டாயம், இதற்காகப் பள்ளி நிர்வாகம் தரும் மன அழுத்தங்கள் ஒரு பக்கம்.

மாணவர்களின் ஒழுக்கம், மாணவ - மாணவிகள் பழகும் விதம், அவர்களைப் பொறுப்பு மிக்கவர்களாக்க வேண்டிய கடமை, அவர்கள் மூலமாகக் தனக்கு வரவேண்டிய பெயர் புகழ், சம்பள - பதவி உயர்வுகள் ஆகிய கவலைகள் மறுபக்கம். இப்படிப் பல அழுத்தங்களும் ஓர் ஆசிரியரின் அமைதியைக் குலைக்கின்றன. அதனால் Cook ஆக இருந்து மாணவர்களிடம் நற்பண்புகளையும், நல்ல அறிவையும் சமைக்க வேண்டிய ஆசிரியர்கள், மன அழுத்தத்திற்குட்பட்டு 'பிரஷர் குக்கர்' போலாகிவிடுவது துர்பாக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்கு ஏற்படும் மன அழுத்தங்களை நீக்க முடியாமல் போகலாம். ஆனால் அந்த அழுத்தத்திற்கான மூல காரணங்களைப் புரிந்து கொண்டு கட்டுப்படுத்த முடியும்

ஆசிரியர்கள் தங்களது பலவித மனஅழுத்தங்களையும் வகுப்பறைக்கு வெளியே விட்டுவிட வேண்டும். உள்ளே கொண்டு வரக்கூடாது.

ஒரு ஜென் கோவிலின் வாசலில் உள்ள போர்டில், 'இங்கே செருப்புகளை விடுங்கள், உங்கள் கவலைகளையும் சேர்த்து' என்ற வாசகம் இருந்தது. ஆசிரியர்கள் இதை மனதில் கொண்டால் அவர்களது மனம் மேம்படும்.

## ஆசிரியருக்கு ஹாஸ்யம் அவசியம்

ஓர் ஆசிரியர் சரியாகப் பாடம் நடத்தவில்லை; கூறியதையே கூறிக் கொண்டிருந்தார், அதுவும் மிரட்டும் வகையில். மாணவர்கள் நெளிய ஆரம்பித்தார்கள். பிறகு சலசலப்பு தோன்ற ஆரம்பித்தது.

அதன் உச்சகட்டமாக அந்த வகுப்பு மாணவன் ஒருவனிடம் வகுப்பு முடிந்த பிறகு யாரோ ஒருவர், அந்த ஆசிரியர் என்ன எடுக்கிறார்? என்று கேட்டார். அந்தக்கேள்வியின் அர்த்தம் என்ன பாடம் எடுக்கிறார் என்பதுதான்.

அதற்கு அந்த மாணவன் வெறுப்புடன், "வேறென்ன, உயிரைத்தான்" என்றானாம்.

பாடத்தைத் திணிக்காமல் அடிக்கடி அழகான ஹாஸ்யங்களைக் கூறுவது ஆசிரியர்களுக்கு ஓர் அத்தியாவசியத் தேவை. ஆசிரியர் பாடத்தோடு நல்ல ஹாஸ்யங்களைச் சொன்னால் மாணவர்கள் அவரைக் கேலி செய்யமாட்டார்கள். இது பலரது அனுபவ உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைய சாப்பிடும்போது இடுப்பு பெல்ட்டைத் தளர்த்திக் கொள்வது போல், பாடம் என்ற விருந்தைப் பரிமாறும்போது நகைச்சுவைகளை வெளிப்படுத்தும் ஆசிரியர் வெற்றிகரமான ஆசிரியர் ஆகிவிடுவார். அதன் மூலம் மாணவனின் மூளையைத் தொடுவதோடு மனதையும் தொட முடியும்.

இது ஆசிரியர் செய்ய வேண்டிய Push Teaching

### தினம் ஒரு மாணவன்

பாடத்தை மிகவும் போரடிக்கும் வகையில் ஓர் ஆசிரியர் நடத்தினார். மாணவர்கள் 'விதியே' என்று காத்துக் கிடந்தார்கள். வகுப்பு முடிந்ததும் ஒரு மாணவன் வெளியே வந்து ஆசிரியரின் பைக்கின் இருக்கையை பிளேடால் கிழித்தான்.

'நீங்கள் வகுப்பில் செய்ததை நான் வண்டியில் செய்தேன்' என்று அதன் மீது எழுதியும் வைத்தான்.

ஆசிரியர் மாணவன் உறவில் பரஸ்பர அன்பு இருக்க வேண்டும். அந்த உறவு செழிக்க என்ன செய்ய வேண்டும்?

பாடம் மட்டும் சொல்லித் தருவது என்பது அறிவால் மட்டும் மாணவனை அணுகும் முறை. மாணவனை வெறும் மூளையாக, மதிப்பெண் வாங்கும் இயந்திரமாகப் பார்க்கக்கூடாது; அவனை இதயப்பூர்வமாக, உணர்வு மூலமாகப் பார்க்கவும் அவனைப் பற்றிய விவரங்கள் ஆசிரியருக்குத் தெரிந்திருப்பது அவசியம்.

மாணவனது விசேஷத்திறமைகள், அவனது வீட்டுச் சூழ்நிலை, பொருளாதார நிலைமை என்று சிலவற்றை ஓரளவிற்காவது ஆசிரியர் அறிந்திருத்தல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை எப்படி நடைமுறைப்படுத்தலாம்?

முதலில் ஆசிரியர்கள் குறைந்தபட்சம், மாணவர்களின் பெயரையாவது தெரிந்து வைத்திருக்க வேண்டும். இது ஒரு சிறிய விஷயமாகத் தோன்றினாலும் மாணவனின் ஒத்துழைப்பைப் பெற இது மிகவும் தேவையான ஒன்றாகும். தன் பெயர், தன்னைப் பற்றிய விவரங்கள் போன்றவை ஆசிரியர்களுக்குத் தெரிந்திருப்பது மாணவனுக்குப் பெருமையையும், சுய கௌரவத்தையும் நிச்சயம் அளிக்கும்.

ஒவ்வொரு நாளும் ஒரு மாணவன் என்று ஆசிரியர் திட்டமிட்டு அழைத்து அவனைப் பற்றி அவனையே கூற வைத்து அவனது சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ளலாம்.

இது மாணவனுக்கும் ஆசிரியருக்கும் இடையே நல்லுறவை உண்டாக்கும். இந்த உறவு ஆசிரியரின் கற்பிக்கும் திறனைக் கூட்டும்; மாணவன், ஆசிரியர் மீது கொண்ட நம்பிக்கை, அவனது கற்கும் திறமை ஆகியவற்றையும் அதிகரிக்கச் செய்யும்.

"நன்றி"

ஆக்கம் **சுவாமி விமூர்த்தானந்தர்** ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்

நவம்பர் கார்த்திகை - 2006.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினை விதைத்தவன் வினையறுப்பான்
## தினைவிதைத்தவன் தினையறுப்பான்

### 62 நாட்கள்

ஏன் இந்த அவலம் என்று ஒருவர் என்னைக் கேட்டார்? ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கையை படித்தால் சரிவரத் தெரியும். இவரது தகப்பன் அவ்வூரில் உள்ள ஒரு பெரிய நிலச் சொந்தக்காரர் தமக்கு சார்பாக பொய்சாட்சி சொல்லும்படி கேட்கப்பட்டார். ஸ்ரீராமகிருஷ்ணரின் தகப்பன் குதிராம் சட்டர்ஜி மறுத்தார். அதன்விளைவு சொந்தவீடு, நிலபுலன்கள் அபகரிக்கப்பட்டு அக்கிராமத்திலிருந்து விரட்டி அடிக்கப்பட்டார். அப்படிச் சத்தியம் தவறாத பெற்றோருக்கு பிள்ளையாக பிறந்தவர் தான் ஸ்ரீராமகிருஷ்ணர். இவரது வாழ்க்கையில் சத்தியத்துக்கு கட்டுப்பட்ட பல நிகழ்வுகள் உண்டு. இவரது சரித்திரத்தை சரிவரப்படிக்கவும். தவத்திரு யோகசுவாமிகள் நம்மிடை வாழ்ந்த ஒரு தவசிரேஷ்டர். அவர் அடிக்கடி சொல்லுவார் "Very eady to humbug" இங்கு புலுடா எடுபடும். ஆகையால் தான் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்வும் வாக்கும் யோகசுவாமிகள் சீரிய தவவாழ்வு இங்கு பெரிதாக எடுபடவில்லை. சங்கங்கள் பல இருக்கலாம் ஆனால் உளத்தூய்மையுடன் செயல்படுவது சிவ தொண்டன் நிலையம் மட்டும் தான் யான் சுவாமிகளின் தரிசனமும் ஆசியும் பெற்ற படியால் தான் பலவிதமான சோதனைகள் மத்தியில் 40வருடங்களைக் கழித்துவிட்டேன்.

"இவ்வுலகம் நிலையில்லாதது. கடவுள் தான் நிலையானது என்பார்" ஸ்ரீராமகிருஷ்ணர். இலங்கையில் தற்சமயம் நடக்கும் நிகழ்வுகள் ஒவ்வொருவர் மனத்திலும் விதம் விதமாகவே பிரதி பலிக்கின்றது. பலர் இந்நிகழ்வுகளை பெரிதாக பொருட்படுத்தவில்லை. காரணம் இவர்களது அறியாமைதான். இதனை மாயை அல்லது மயக்கம் என்பார்கள் அறிஞர்கள். நான் பலமுறை இந்ததுன்பகரமான நிகழ்வுகளை பற்றி எழுதியுள்ளேன். பத்திரிகையாளர்களும் இதில் என்ன விந்தை இருக்கிறது என்று ஒரு சிலர் நேரிடையாக தெரிவித்திருக்கிறார்கள் இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை

சுவாமி விவேகானந்தர் இப்படித்தான் மக்கள் இருப்பார்கள் என்பதனை ஒரு கதை மூலம் சிக்காகோ நகரில் நடை பெற்ற சர்வமத மகா சபையில் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதை வருமாறு:

"ஒரு சமுத்திரத்தில் வாழ்ந்த தவளை ஒரு கிணற்றுக்குள் வீழ்ந்துவிட்டது. அந்தக்கிணற்றில் வாழ்ந்த தவளை இதனைநோக்கி நீ எங்கிருந்து வருகிறாய் என்று வினவியது. நான் சமுத்திரத்திலிருந்து வருகின்றேன் என்றது. கிணற்றுத் தவளை பல வருடங்கள் கிணற்றில் வாழ்ந்த படியால் இக் கூற்றை மறுத்தது. சமுத்திரத்திலிருந்து வந்த தவளை எவ்வளவோ சொல்லியும் இதனைக் கேட்ட கிணற்றில் வாழ்ந்த தவளை நீ பொய்சொல்லுகிறாய் என்று கிணற்றுத்தவளை மறுத்துவிட்டது". சுவாமிவிவேகானந்தர் "நாம் கிணற்றுத்தவளை போல் வாழ்வதால் நாம் ஒத்துப் போவதில்லை" என்றார் ஒரு ஆத்மீகவாதியான சுவாமிஜி மிகவும் எளிமையான கதை மூலம் மனித சமுதாயத்தின் பின்னடைவைத் தெரிவித்திருக்கிறார். எனக்குள் தோன்றிய பெரிய கேள்வி இன்று நவீன உலகில் வாழும் பலமதத்தலைவர்கள் 3 வேளை வயிராற உண்டு, T.Vல் தோன்றியும் பெரிய அரசியல் வாதிகளுடன் கலந்து உறவாடியும் இருப்பதால் சாதாரணமான குடிமகனின் கஷ்டம் தெரிய வாய்ப்பில்லை. ஏன் எனில் Helicopter, Aeroplane ல் பறப்பவருக்கு புல் பூண்டு தெரியவாய்ப்பில்லை. படித்தவர்களும் இப்படிப்பட்டவர்களின் சகவாசத்தை நாடி ஓடுகின்றனர்.

**"வேடிக்கை செய்கிறான் பரமபிதா"**

எனக்கு நன்றாக தெரிந்த யோகசுவாமிகளை 9 வருடங்கள் தரிசிக்க பழகவாய்ப்பு கிட்டியது. இவர் யாழ்ப்பாணத்தில் தான் பலவருடங்கள் வாழ்ந்தவர். பலருக்கு இவரைப்பிடிக்காது. ஏன் எனில் ஏசுவார் என்பார்கள். மாணவனாக இருந்த பொழுது ஒரு சமயம் சுவாமிகளைச்சந்திக்க சென்ற பொழுது கொஞ்சம் மணிலாக் கொட்டையுடன் சென்று தரிசித்தேன். அந்த கொட்டிலில் பட்டு பிதாம்பரம் கிடையாது. பெரிய அழகான கார், பல பணக்காரர் அச்சமயம் அங்கு கூடியிருக்கவில்லை. சுவாமிகள் மிகவும் அன்பாக இந்த மணிலா கொட்டை பக்கெற்றை பெற்றார், படம் பிடிக்கவும் Photographer இருக்கவில்லை. இந்தச்செய்தி அந்தக்காலத்தில் உள்ளபத்திரிகையிலும் வரவாய்ப்பில்லை. சுவாமிகள் ஒருக்காலும் வெளிவேடத்தை விரும்பவில்லை. என்க்குத்தெரிந்த தினகரன் ஆசிரியர் சுவாமிகளின் படத்தை தினகரனில் பிரசுரித்துவிட்டர். சுவாமிகள் அவரைக் கூப்பிட்டு கண்டித்து தான் உலகில் இல்லாத காலத்தில் வேணும் என்றால் படத்தை பிரசுரியும் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் பல யாழ்ப்பாணமக்கள் சுவாமிகளின் அடிச்சுவற்றை பின்பற்ற மறுத்தார்கள்? இந்த கேள்விக்கு நீங்கள் தான் விடை காணவேண்டும். சுவாமிகள் அவ்வப்பொழுது பாடிய நற்சிந்தனைப்பாடல்களை புத்தகமாக அச்சடித்து இவரிடம் கொடுத்த பொழுது என்ன சொன்னார்.

"இது பேண்ட மலம்" என்றார் இதுதான் ஆத்மீகம். "இடாம்பீக வாழ்வு கொண்டுவரும் தாழ்வு" என்று ஒரு சுவரில் பருத்தித்துறையில் பெரிய எழுத்தில் முன்பு இருந்ததை இப்ப உள்ள பலர் மறந்து இருப்பார்கள். எனது ஆத்மீக பயணத்தில் காஞ்சி பெரியவர், ஸ்ரீசத்தியசாயிபாபாவையும் தரிசிக்கும் பாக்கியம் கிட்டியது. ஸ்ரீசத்தியசாயிபாபாவை 3முறை தரிசித்துள்ளேன். அடியேனை முதன் முறைக்கு "I am very happy thatyou have come, Mr. Kasturi told about you" என்றார் விபூதிபிரசாதம் தந்தார் இரண்டாம்முறை "with love" என்று எழுதிகையெழுத்து இட்ட ஒரு புத்தகம் என்னிடம் உண்டு. ஒருமுறை I have come from Sri Lanka என்றேன். இதற்கு சொன்னபதில் "All are Rakshas" என்றார்.

எனக்கு இது விளங்கவில்லை. படித்தமக்களே இதனை சற்று யோசித்து பார்த்தால் சிலவேளை விளங்கலாம். அடியேன் எழுதிய இந்தக் கருத்துக்களை என்னை முதன்முதலில் அடிமை கொண்ட யோகசுவாமிகளின் ஒரு அருள் மொழியுடன் நிறைவு செய்ய விரும்புகின்றோம். "யோகசுவாமிகள் I know I know என்றால் இதன் விளக்கம் I do not know என்றார் ஆகவே தற்சமயம் நடக்கும் பலவிதமான சம்பவங்களை எளிதில் மக்கள் காலம் செல்லச்செல்ல மறந்துவிடுவார். ஏனெனில் அனேகம் மக்கள் செம்மறியாட்டு கூட்டமே. யோகசுவாமி அடிக்கடி கூறுவர் ராமர், கிருஷ்ணர், யேசு, புத்தர் வந்தார்கள். உலகம் இருந்தபடிதான் இருக்கும். பெரிய மாற்றம் ஏற்படாது. ஆகவே யாழ்ப்பாண மக்கள் செய்ய வேண்டிய ஒரு பெரிய கடமை யோகசுவாமிகள் விட்டுச் சென்ற அருள் மொழிகளை இனிவரும் சமுதாயத்திற்கு மெல்லம் மெல்லமாக சொல்லவேண்டும். இதுதான் தலையாயகடமை ஒருபுதினமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டறியாதன கண்டேன்
## மனிதநேயம் இறந்துவிட்டது

12.08.2006 தொடங்கிய இந்த துன்பகரமான நிலையில் 31 நாட்களை கடந்துவிட்டோம் 3 நாட்கள் தொடர்ந்த ஊரங்கு சட்டம் 15.08.2006 காலை 11மணிபோல் தழர்த்தப்பட்டது. மக்கள் அலை அலையாக கடைகள் முன் திரண்டனர். எனது நண்பரும் யானும் ஒருவரும் செல்லாதகடைக்குள் சென்று எவறடிபற்றி வாங்கித் தந்தார் எனது நண்பருடன் பின்பு ஒரு வாழைப்பழக்கடைக்கு சென்று பழங்கள் வாங்கி அங்கேயே சாப்பிட்டேன் எனது நண்பர் புகைப்படம் எடுக்க எத்தனித்தார். ராணுவ சிப்பாய் புகைப்படம் எடுக்க வேண்டாம் என்று தடுத்தார். அவரது கட்டளைக்கு அடிபணிந்தோம். 4பேருக்கு ஒரு மூடைசீனி விற்கப்பட்டது. சிலர் மோட்டார் சயிக்கிளில் ஒரு மூடைசீனி கொண்டுபோவதைப் பார்த்தோம்.

அடுத்தநாள் மீண்டும் முழுநேர ஊரங்கு சட்டம்; வெளியில்வர முடியவில்லை. ஒரு சில அன்பர்கள் 1கிலோ சீனி, பயறு, 1லீற்றர் மண்எண்ணை, பிஸ்கட் தந்து உதவினார்கள். கடைகளில் நீண்ட வரிசை நான் ஒரு கடைக்கும் செல்ல விரும்பவில்லை. எங்கள் ஆச்சிரமத்திற்கு வந்தவர்களுக்கு எங்கள் ஆச்சிரம தென்னை மரங்களில் உள்ள தேங்காய்யாவையும் வழங்கினோம். கையில் இருந்த அரிசியும் கொடுத்தோம் ஒருகடைக்காரர்மட்டும் ஆச்சிரமத்துக்கு வந்து 1கிலோசீனி, 2பால்பக்கற் 4கிலோமா தந்தார். இதனையும் சிலருக்கு கொடுத்துவிட்டோம். ஒரு சிலர் உணவு தந்தார்கள் ஒரு அன்பர் தொடர்ந்து உதவி வருகிறார். ஒவ்வொரு பௌர்ணமி தினமும் 1982 தொடக்கம் சமைத்த உணவு கொடுப்பது வழக்கம். இம்முறையும் 8.9.2006 25கொத்து அரிசி சமைத்து புனிதநகர் கற்கோவளத்தில் நீண்ட கியு வரிசையில் நின்றமக்களுக்கு வழங்கினோம். நாங்கள் அங்கு உணவுடன் சென்றசமயம்தான் அவர்களை அன்று சுற்றிவளைத்த செயல் முடிவுக்கு வந்தது. மக்கள் ஆவேசமாக உணவைப் பெற்றார்கள்.

அடுத்த நாள் 09.09.2006 வல்லிபுர ஆழ்வார் கோவிலில் பொங்கல் பூசை செய்து ஸ்ரீபரமானந்த ஆச்சிரம சிறார்களுக்கு பொங்கல் வழங்கினோம். நாங்கள் கண்ட உண்மை நிலை வசதிபடைத்த பலரிடம் மனிதநேயம் முற்றாக மறைந்துவிட்டது. எங்களுக்கு முன்பைவிட மனிதநேயம் வளர்ந்துவருகிறது. இதற்கு நாம் அன்னை சாரதா தேவிக்கு நன்றியுடையோம். மனம் தளர்வுறுகிறது இன்னும் வரப்போகும் நாட்களை தாங்கும் சக்தியை ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் தருவார் என்று நம்புகிறோம்.

**அன்பே சிவம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய அன்னையின் தைரியமும் அன்பின் பிணிப்பும்

கொல்கத்தாவிலிருந்து பலமைல்களுக்கு அப்பால் உள்ள ஜெயராம்பாடி என்னும் சிறிய கிராமத்தில் பிறந்த தூய அன்னை ஸ்ரீசாரதாதேவி. இவரது பவித்திரமான வாழ்வு நிறைபெற்று 150 வருடங்களாகின்றன. தற்காலத்தில் இவரது வாழ்க்கையிலிருந்து நமக்கு ஏதும் சீரியபாடம் கிடைக்குமா? இந்தியாவில் தற்சமயம் நடக்கும் நாளாந்த செய்திகளை பலர் பத்திரிகை, T.Vவாயிலாக அறிந்திருப்பீர்கள். சாதி, மதச்சண்டை, மாநிலக்களுக்கிடையில் பிளவு இவைகளினால் நாளுக்கு நாள் கொலைகள் நடந்துவருகின்றன. ஜனநாயகம் ஒரு புறம் மறுபுறம் இருள் மயமான சூழலில் அங்கு 125 கோடிக்கு மேல் மக்கள் வாழ்கின்றனர்.

தூய அன்னை ஸ்ரீசாரதாதேவி ஒரு இல்லத்தரசியாக வாழ்ந்தாலும் அவரிடத்தில் மேன்மையான ஆளுமை இருந்தது. இவர் வாழ்ந்த காலத்தில் வீடுகளை உடைத்து திருடும் திருடன் அம்ஜத் வாழ்ந்து வந்தான் பல முஸ்லீம் கமக்காரர்கள் அதிகமாக ஏழ்மைத்தனத்தால் திருட்டுத்தொழிலில் ஈடுபட்டனர். இவர்கள் முஸ்லீம் இனத்தவர்களான படியாலும் திருட்டுத்தொழிலில் ஈடுபட்டமையால் இந்துக்கள் இவர்களை வெறுத்து ஒதுக்கினர். தூய அன்னை அன்புக்கு இருப்பிடமானவர் இவர் அம்ஜத்தை தனது மகன் போல் பாவித்து இவனுக்கு உணவு கொடுத்து வந்தார். அன்னை வாழ்ந்த காலத்தில் மதவேறுபாடு, சாதிபிணக்கு மிகவும் தீவிரமான காலத்தில் அன்னையின் இச்செயல் பிராமணர்கள் கூட எதிர்க்க வல்லமை இல்லாதவர்களாக இருந்தனர். காரணம் அன்னையின் எளிமை, பரிவு எல்லா எல்லைகளையும் கடந்துவிட்டது.

இன்னும் ஒரு நிகழ்வு நமக்கு அன்னையின் பரிவை புலப்படுத்துகிறது. கோபிந்தோ என்னும் கீழ் சாதிப்பையன், மிகவும் கொடிய சருமவியாதியால் அவஸ்தைப்பட்டான். எவரும் இவனைக் குணப்படுத்தும்படி கேளாமல் தாய்மையின் பரிவுடன் அவன் பக்கத்தில் இருந்து நோயின் பிடியிலிருந்து காப்பாற்றினார்.

சமகால நிகழ்வுகளை திரும்பவும் அசைபோடும் பொழுது நமக்கு பேர் அச்சம் ஏற்படுகிறது. தூய அன்னையின் செயல்களை உன்னிப்பாக மனத்தில் இருத்தினால் எதிர்காலம் பொன்மயமான காலமாக மாறும் பேச்சுகளாலோ பெரிய பிரசாரங்கள் செய்வதாலோ இந்த அரக்கச் செயல்களை அழிக்க முடியாது. மகனே! "உனக்கு மனஅமைதி வேண்டுமானால் உலகத்தவர் மீது குறைகாணாதே. உன்னுடைய குற்றத்தையே கிளரிப்பார் இவ்வுலகில் வேண்டத் தக்கவர், வேண்டத்தகாதவர் என்று எவரும் இல்லை." அன்னையின் ஆழ்ந்த அன்பும் எளிமையும் இன்னும் உலகம் யாவும் மக்களிடைபரவிவருகின்றது. இவரது மறைவுக்கு 3நாட்களுக்கு முன்பு கூறிய செய்தி யாவரும் ஊன்றிப் படிக்கவேண்டியது ஒன்றாகும்.

-சாரதை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

100 நாட்களுக்குமேல் இந்த அவலம். பல பணம் படைத்தவர்களும் பெரிய மனிதர்கள் இதைப் பற்றி கவலைப்பட்டதாக தெரியவில்லை. ஏழைகள் அன்றாடம் உழைப்பவர்கள் பாடுதான் பெரிய திண்டாட்டம், தூய அன்னை ஸ்ரீசாரததேவியின் திருவருளால் இவ்வளவு நாட்கள் நின்று பிடித்து விட்டோம். தூய அன்னை முக்கியமாக பக்க பலமாக இருந்துவருகிறார். இவரது அருளால் சில நல்லமனம் படைத்தவர்கள் செய்த உதவிகளை நாம் மறக்க முடியாது.

அன்பேசிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மகளே உனக்கு
மன அமைதிவேண்டுமானால்
உலகத்தவர் மீது குறை
கூறாதே. உன்னுடைய
குற்றத்தையே கிளரிப்பார்.
உலகத்தில் வேண்டத்தக்கவர்
வேண்டத்தகாதவர் என்று யாரும்
இல்லை. உலகனைத்தும் நமதே”

தூயஅன்னை ஸ்ரீசாரதாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org